DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 693/2025

Prosecution PW 5

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | அஜய் குமார் |
| Father's Name | : | ராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 25.02.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் உழைப்பாளர் நகரில் குடியிருந்து சலூன் கடை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் மாணிக்கம் என்பவர் கையொப்பம் செய்தார். கடந்த 16.05.2024ம் தேதி இரவு சுமார் 07.00 – 08.00 மணியளவில் சஞ்சை நகர்

வழியாக சென்றபோது செயின் திருட்டு சம்மந்தமாக கரூர் நகர போலிசார் சம்பவ இடம் வந்து விசாரணை செய்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதற்காக சம்பவ இடத்தில் நானும், மாணிக்கமும் பார்வை மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

சஞ்சை நகரில் சலூன் கடை இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரரை எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு அருகே சிசிடிவி கேமராக்கள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே வீடுகள் உள்ளன என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் தெரியாது. திருட்டு சம்மந்தமாக எழுதியிருந்தது என்று தெரியும். நான் சலூன் கடை வைத்துள்ளதால் போலிசார் வந்து செல்வார்கள் என்றாலும், அதனால் அவர்கள் தயவு வேண்டும் என்பதற்காக அவர்கள் கேட்டுக்கொண்டதற்கினங்க கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஓம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**